சேர்த்து வைத்து, அவர்கள் நடத்துகின்ற ஒரு சூழ்நிலே இருக்குமேயானல், ஒரு பள்ளியிலிருந்து மற்ருெரு பள்ளிக்கு மாற்றுவதிலே அதிக சிரமங்கள் ஏற்படாது. அந்தந்தப் பள்ளிகளைப் பொறுத்துத்தான் அதனுடைய பணி மூப்பு நிலைகள் வகுக்கப்படும் என்று சொன்னல், அந்த மாறுதலிலே பல்வேறு தகராறுகள் ஏற்படக்கூடும். நான்கு-ஐந்து. பள்ளிகளைச் சேர்த்து நடத்துகின்றபோது, அந்த நான்கைந்து பள்ளிகளுக்கும் சேர்ந்து ஒரு பொதுவான பணி மூப்புப் பட்டியலை வைத்திருப்பார்களேயானல், இந்த மாறுதலிலே அதிக சங்கடங்கள் இருக்காது. அதுபற்றி ஆராயலாம்.

(பிற்பகல் 4–10.)

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, சில நிர்வாகத்திற்கு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறு அனுமதி வழங்கப்படுவதன் காரணமாக அக்ரிமெண்டிலே இந்த மாறுதலை பிரிவாகச் சேர்த்திருக்கிருர்கள். அவர்கள் ஊதியம் வழங்கும்போது குறைந்தது 8 மாத காலம் பணியாற்றி இருக்க வேண்டும் என்று இருக்கிறது. இவ்வாறு அரசு பள்ளிகளுக்கு அனுமதி வழங்கினல், அந்த விதியைத் தளர்த்த அரசு முன்வருமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரே கார்ப்போரேட் பாடி என்பதை ஏற்றுக் கொண்டு, ஒரு இடத்திலேயிருந்து மற்ருெரு இடத்திற்கு மாறுதல் செய்யலாம் என்பதையும் ஏற்றுக் கொள்ளலாம் என்ற சூழ்நிலையைப் பார்க்கின்றபோது, இந்த 8 மாத காலம் பணி ஆற்றியிருக்கின்ற நிலைமை வராது. அவர்கள் இரண்டு பள்ளிகளிலும் ஆற்றியிருக்கிற பணிக்காலத்தைச் சேர்த்துத்தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும்.

திரு. பி. ஆர். தாமஸ்: அப்படி வழங்கப்படாமல் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி வழங்கப்படாமல் இருந்தால், அதைப்பற்றித் தனியாகக் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அதைப் பற்றி ஆராயலாம்.

Publication of Examination Results in the Fort St. George Gazette.

*254 Q.—Thiru K.S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether the practice of publishing the results of S.S.L.C., T.S.L.C., and University Examinations in the *Fort St. George Gazette* has been discontinued;

(b) if so, the year from which the practice has been discontinued; and

(c) the reason therefor?

1975 ஏப்ரல் 19]

தமிழ்நாடு அரசிதழில் வெளியாகும் தேர்வு முடிவுகள்.

திரு. கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) எஸ்.எஸ்.எல்.சி., டி.எஸ்.எல்.சி., பல்கலைக்கழகத் தேர்வு முடிவுகளை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடும் வழக்கம் கைவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எந்த ஆண்டிலிருந்து இந்த வழக்கம் கைவிடப் பட்டுள்ளது ?

(உ) அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு இரா. டாக்டர் நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-ல் இருந்து.

(உ) அரசு அச்சகத்தில் இருந்த வேலைப் பளுவைக் குறைப்பதற்காக தமிழ்நாடு அரசிதழில் தேர்வு முடிவுகளை வெளியிடுவது நிறுத்தப்பட்டது.

திரு. கே. எஸ். கணபதி : பல முக்கியமான அரசு ஆணைகள்கூட தமிழ்நாடு அரசு இதழிலே வெளியிடப்படுவதில்லை. குறிப்பாக கல்வி இலாகாவிலே வெளியிடப்படும் பல அரசாணைகள் வெளியிடப்படுவதில்லை. அதுவும் இதே காரணத்திற்காகத்தான் வெளியிடப்படவில்லையா அல்லது வெளியிடுவதற்கு அரசு இனி முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசுப்பதிவு இதழிலே வந்து மற்றவர்கள் பார்ப்பதற்கு முன்னாலேயே பத்திரிகைகளில் வந்து விடுகிறது. அவரவர்கள் தெரிந்துகொள்கிறார்கள். பிறகு அரசுப் பதிவு இதழிலே வெளியிடுவது பெரும் பளுவாக அல்லது சுமையாக இருக்கிறது என்பதனால் தேவையில்லை, வேறு ஏற்பாடு செய்து கொள்ளலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள். ஆகையால்தான் இரண்டு மூன்று ஆண்டு களாக அது நிறுத்தப்பட்டிருக்கிறது. கல்வித்துறை தேர்வு ஆணையரே இதைப்பற்றி யோசித்து, இது தனியாக கல்வித்துறையின் சார்பாகத் தேவைப்படுகிறதா, அந்த முடிவுகளை எல்லாம் வெளியிட்டு பெர்மெனென் டாக இருப்பது பலனளிக்கும், அப்படி இருப்பது அவசியமானது, பத்திரிகை களில் வருவதுடன் மற்றும் அரசுப் பதிவு இதழிலும் வரவேண்டும் என்று கருதப்பட்டால், அதைப்பற்றி ஆராயலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த மூன்று ஆண்டு காலமாக இல்லை. இதனால் சில விதிகளை நாம் மாற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதை மாற்றித்தான் ஆகவேண்டும். ஏனென்றால் "Subject to the publication in the *Fort St. George Gazette*" என்று இருக்கிறது.

திரு. செ. முத்துசாமி : கல்வித்துறையினுடைய சில ஆணைகள் கெஜட்டிலே வருவதில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது உண்மைதான். அரசு ஆணைகள் பொதுவாக கெஜட்டிலே பிரசுரிக்கப்படாவிட்டாலும்கூட, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு கல்வித் துறையிலே வெளியாகின்ற அரசு ஆணைகளின் நகல் அச்சிடப்பட்டு, அந்த ஆணைகள் அனுப்பப்படுமா? அவை கெஜட்டிலே வெளியாகாவிட்டால், சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தனியாக அரசு ஆணை நகல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அரசு ஆணைகள் பெரும்பாலும் அரசு இதழிலே வெளியாகின்றன என்றுதான் கருதுகின்றேன். தேர்வு முடிவுகளைப் பொறுத்தவரையிலேதான், அரசுப்பதிவு இதழிலே வருவதில்லை என்று நான் கருதுகிறேன். அந்த நிலைமைகள் இருக்குமேயானல், அதை வேறு எந்த வகையிலே வெளியிடலாம் என்பதைப் பற்றி அரசு ஆராயும்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : வினு எண் 255 ஒத்தி வைக்கப்படுகின்றது.

Drinking water from Vaigai to Virudhunagar.

***256 Q.—Thiru V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :**

(*a*) whether the Virudhunagar Municipality has passed a resolution requesting the Government to bring drinking-water from Vaigai ; and

(*b*) if so, the steps taken thereon by the Government ?

விருதுநகருக்கு வைகையிலிருந்து குடிநீர்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) விருதுநகருக்கு வைகையில் இருந்து குடிநீர் கொண்டு வர வேண்டும் என்று அந்நகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) நகராட்சியின் தீர்மானம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு வந்துள்ளது. தலைமைப்பொறியாளர் அலுவலகத்தில் இது பரிசீலனையில் உள்ளது.